நற்பணியே நம் வாழ்வு!
MADURAI SEED

மதுரை சீடு இளைஞர்கள் வழங்கும்

# புதிய வெளிச்சங்கள்

தனிச்சுற்று இதழ்

"வெளிச்சத்தின் வேராய் விளங்குவோம்
புது உலகின் மாதிரியாய் திகழ்வோம்"

ஏப்ரல் 2009 - செப்டம்பர் 2009 உலகு - 2 வெளிச்சம் - 4

## அரசு மருத்துவமனை

தென்தமிழக மக்களை காக்கும் கடவுளர் மீனாட்சியும், சொக்கரும் என்றால் அதற்கு ஒரு படி மேல் மிக பிரம்மாண்டமான கட்டிடங்களாய் விரிந்து தேடி வரும் ஏழையருக்கெல்லாம் இலவச சிகிச்சை மூலம் உயிர் காப்பது மதுரை அரசு மருத்துவமனை என்று சொன்னால் மிகையாகாது.

அரசு மருத்துவமனையினைக் கடந்து செல்லும் ஒவ்வொரு முறையும் மனசுக்குள் ஏதோ ஒரு பதட்டம். ஆம்புலன்ஸ் சத்தம் தரும் திகில். மருத்துவமனை என்றால் பயமும், மன அவஸ்தையும் தான் என மனதில் ஊறிவிட்டிருந்தது. ஒருநாள் நான் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். சீட்டு பதிந்து 23-வது வார்டுக்கு அனுப்பப்பட்டேன். சுமார் 200 பேர் நிற்கினறனர். உள்ளே "போகலாமா? வேணாமா?" என யோசிக்கும் போதே வரிசை நகரத் தொடங்கியது. யாரும், யாருடனும் பேசவில்லை. என் மனம் முன்னும், பின்னுமாய் நகரத் தொடங்கியது.

விதவிதமான பிரச்சனைகள், வார்டு தெரியாமல் அலையும் கிராமத்து மனிதர்கள். நர்ஸ்களாலும், மருத்துவமனை பிற சிப்பந்திகளாலும், பேச்சு வாங்கும் ஒன்றுமறியா ஏழைகள். 3 கோடி தென்தமிழக மக்களுக்கு அரசு மருத்துவமனையின் வசதிகள் எந்த மூலைக்கு என்று தோன்றியது. மதுரையை சுற்றியுள்ள அனைத்து மக்களும் உயர் சிகிச்சை எனில் இங்கு தான் வரவேண்டும்.

மருத்துவர்களின் மனதில் நோயாளிகளின் மீதான அக்கறை முற்றிலுமாக அழிந்துவிடவில்லை. மருத்துவர்களை மட்டுமே குறைசொல்லி விட முடியாது. அவர்கள் போதுமான அளவு அக்கறைக் காட்டுவதற்கும், பரிவு கொள்வதற்கும் தடையாக எத்தனையோ வகையான முயற்சிகள் ஊடுருவி உள்ளன.

பெரிய நகரங்களில் தொடங்கி, சிறிய கிராமம் வரை, மருத்துவத்துறை வணிக முயற்சிகளில் மூழ்கிக் கிடக்கிறது. விதவிமான விளம்பரங்களும், ஊடகப் பிரச்சாரப் போட்டிகளும் மருத்துவத்தில் நேரடியாக நடைபெறும் போட்டிக்கான

கண்கூடான சாட்சிகளாக இருக்கின்றன. நோயுற்ற மனிதனோ ஆதிகாலம் தொட்டு இன்றுவரை, வேதனையும் கண்ணீருமாக துயர் நீக்கும் கைகளுக்காகப் பெருமூச்சிட்டபடியே காத்திருக்கிறான்.

பல நேரங்களில், பளபளக்கும் கிரானைட் கற்களும், மினுக்கும் விதவிதமான லைட்டுகளும் பத்துப் பதினைந்து தளங்கள் கொண்ட மருத்துவமனைக்குள் நுழைவதற்கே பயமாக இருக்கிறது. அந்தப் படிக்கட்டுகள், கட்டடங்களுக்குப் பின்னே எத்தனையோ நோயாளிகளிடமிருந்து பறிக்கப்பட்ட பணமும், அவர்களின் கண்ணீர் ஈரமும் உலராமல் இருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

தமிழில் மருத்துவமனை அவலத்தைப் பற்றி துல்லியமாக, அதே நேரம் உணர்ச்சி வசப்படாமல் எழுதப்பட்ட அபூர்வமான கதை சுஜாதாவின் "நகரம்". சுஜாதா, தமிழ் உரைநடையில் புதிய வேகத்தையும், போக்கினையும் உருவாக்கியவர். அவருடைய உரைநடை தமிழுக்கு முற்றிலும் புதிது. வாக்கியங்களின் வழியே அவர் உருவாக்கும் வாழ்க்கைச் சித்திரம் மிக நுட்பமானது.

"நகரம்" கதையில், மதுரை அரசுப் பொது மருத்துவமனையில், வள்ளியம்மாள் என்ற மூனாண்டிபட்டி கிராமத்தைச் சேர்ந்த பெண், தன் மகள் பாப்பாத்திக்கு காய்ச்சல் கண்டுள்ளதாக கூட்டிக்கொண்டு வந்து சேர்க்கிறாள். அங்கே ஒரு ஸ்ட்ரெச்சரில் அவளைப் படுக்க வைத்து, மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு ஒரு பெரிய டாக்டர் பாடம் நடத்துகிறார். பின்பு, பெட்டில் அட்மிட் பண்ணும் படி சொல்லிவிட்டு அவர் போய்விடுகிறார்.

அதற்காக என்ன செய்வது என்று தெரியாமல், வள்ளியம்மாள் அலைகிறாள். ஒவ்வொருவரும் ஒரு ஆளைப் பார்க்கச் சொல்லித் துரத்தி விடுகின்றனர். மகளைத் தனியே ஸ்ட்ரெச்சரில் விட்டுவிட்டு அங்கே கொடுத்த சீட்டை வைத்துக்கொண்டு, பெட்டில் சேர்க்க அனுமதி வாங்க அலைகிறாள். அதற்குள், "வெளி நோயாளிகளுக்கான நேரம் முடிந்து விட்டது. நாளை காலை வாருங்கள்" என்று கதவை மூடி விடுகிறார்கள்.

நோயாளிகளைப் பார்த்துவிட்டுத் திரும்பும் பெரிய டாக்டர், காலையில் தான் பார்த்த கிராமத்துப் பெண்ணை பெட்டில் அனுமதித்து விட்டார்களா என்று விசாரிக்க, மறுநாள் காலை வரச் சொல்லி விட்டதை அறிந்து கோபப்படுகிறார். "என்ன முட்டாள் தனம்! நாளைக்குள் அந்தப் பெண் செத்துப் போய் விடுவாள். உடனே அவளைத் தேடிப் பிடித்து அட்மிட் பண்ணுங்கள்! என்கிறார்."

ஆனால், தன் மகளைக் காணாமல் தவித்துப் போகும் வள்ளியம்மாள், யாருமற்ற அனாதையாக ஸ்ட்ரெச்சரில் பாப்பாத்தி தனியே ஓரிடத்தில் கிடப்பதைக்

கண்டு மனம் நொந்து, ஊருக்குக் கூட்டிப்போய் விபூதி மந்திரித்து போட்டுவிட்டால் குணமாகி விடுவாள் என்ற யோசனையுடன் அவளை ரிக்ஷாவில் ஏற்றிக்கொண்டு புறப்படுகிறாள். ரிக்ஷா பேருந்து நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டு இருப்பதோடு கதை முடிகிறது.

ஓர் உயிரோடு விளையாடும் இந்தப் புறக்கணிப்பு, கதை என்பதை மீறி மனதில் ஆழ்ந்த வலியை ஏற்படுத்துகிறது. இது வெறும் கதையல்ல ; கண் முன்னே தொடரும் நிஜம். ஊரும், பேரும் வேறாக இருக்கலாம். ஆனால், இன்றும் ஏதோ ஒரு மூலையில் ஆணோ பெண்ணோ இது போன்ற முறையான மருத்துவம் கிடைக்காமலும் அதற்கான வழிமுறை அறியாமலும் கடந்து போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள்.

நாகரீகமும், தொழில்நுட்ப வளர்ச்சியும் நம்மை அதிநவீன உலகை நோக்கிக் கூட்டிச் செல்லும் போது, மனித வலியும் புறக்கணிப்பும் இருண்ட காலத்தை நோக்கிப் பின்னோக்கி இழுத்துப் போவது மறுக்க முடியாத நிஜம். குழந்தைகளைப் பார்க்கும் போதுதான் மருத்துவத்தின் தேவையும், பயமும் ஒரே நேரத்தில் உருவாகிறது. இப்படி பயம் உருவாவது எனக்கு மட்டும் தானா இல்லை யாவருக்குமா என்று தான் தெரியவில்லை.

- என்று முன் எப்போதோ படித்த சுஜாதாவையும், எஸ்.ராமகிருஷ்ணனையும் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே, என் முறை வந்தது. மருத்துவர் பரிசோதித்தார். மருந்துகளை எழுதிக் கிறுக்கியபடி, நிமிராமலே கொடுத்தார். நான் ஆழ்ந்த பெருமூச்சு விட்டபடி வீடு திரும்பினேன்.

O.மணிகண்டன் B.E.

## கல்லறைப் பூவான கடிதம் ஒன்று

அவருக்கு திருமணம். திருப்தியாய் வாழ்ந்து கொண்டிருந்தவரை நாங்கள் நெருக்கியதால்தான் திருமணம் என்பதை ஒத்துக் கொண்டார். மணவாழ்வுக்கு இப்போது பார்க்கும் வேலையும், சம்பளமும் போதாது. எனவே நாங்கள் படிக்கும் கல்லூரி அறிவித்த விரிவுரையாளர் பணிக்கு தேவையான விண்ணப்பங்களைத் தயாரித்து நாங்களே அனுப்பியும் விட்டோம். இப்போது அவரும் நாங்களும் விரிவுரையாளர் தேர்வுக்காக காத்திருந்தோம்.

அழைப்பு வரவில்லை. கல்லூரி சென்று விசாரித்தோம். முறையாக வந்த விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு அனைவரையும் தேர்வுக்கு அழைத்திருக்கிறோம் என்று பதில் கிடைத்தது. இருப்பினும் கடிதம் கிடைக்காதலால் மனம் சோர்ந்து அதை மறந்துவிட்டோம். விரிவுரையாளர் தேர்வும் முடிந்தது. இப்போது ஒரு கடிதம்

எங்களுக்கு வந்தது. ஆம், அது முடிந்து போன விரிவுரையாளர் தேர்வுக்கான அழைப்புக் கடிதம்.

கல்லூரி கடிதம் அனுப்பிய நாள் 15.9.2009

விரிவுரையாளர் தேர்வு நடந்த நாள் 18.9.2009

கடிதம் கிடைத்த நாள் 24.9.2009

கடிதம் முறையாக கிடைத்திருந்தால் 16.9.2009 அன்று கிடைத்திருக்க வேண்டும். நம் அஞ்சலக ஊழியர்கள் செய்த திருவிளையாடல், ஒருவருக்கு பணிவாய்ப்பில் பங்கேற்க முடியாமல் போய் விட்டது. டெலிவரி சீல் போடாமலிருந்தது. பணியை ஒழுங்காக செய்யாத போஸ்ட்மேன் என்று தவறுகள் சங்கிலியாய் தொடர்ந்திருந்தது.

முதலில் நாம் கொடுத்த புகார் மனுவை போஸ்ட் மாஸ்டர் மறுதலிக்க பார்த்தார். நாம் கண்ணீரும் குமறலுமாய் விவரித்த போது பிரச்சனையின் தீவிரம் உணர்ந்த போஸ்ட் மாஸ்டர், போஸ்ட்மேனை தவறுக்கு மன்னிப்பு கேட்க சொல்வதாக சொன்னார். மன்னிப்பு வழங்கியது பாதிக்கப்பட்டவரின் பெருங்குணம். ஆனால் எதிர்காலம்?

நண்பர்களே, இளைஞர்களே கடுமையாக உழைப்போம், சிறப்பாக படிப்போம், அரசு வேலைகளுக்கு முயற்சிப்போம். யாரும் பாதிக்கப்படாத முறையில் நியாயமான சேவைகளை அரசு பணிகளில் இணைந்து எல்லோருக்கும் வழங்க உறுதி கொள்வோம்.

பாதிக்கப்பட்டவர் போஸ்ட்மேனுக்கு மன்னிப்பு வழங்கியதோடு பின்வரும் கோரிக்கையை முன்வைத்தார். "வருங்காலங்களில் கடிதங்களை முறையாக வழங்க வேண்டும். முதியோர், விதவை மற்றும் அரசு உதவித்தொகைகள் வழங்குவதில் இனாம் கேட்கவோ, பெறவோ கூடாது". 'சரி' என்று போஸ்ட்மேன் சொல்லியுள்ளார். பொறுத்திருந்து பார்ப்போம். கடிதம் ஒரு போஸ்ட்மேனை திருத்தியதா என்று. தாமதமான கடிதம் கல்லறைக்கு வந்த மலரின் கதை போலானது. என்னசெய்வது?

S.சுல்தான் அலாவுதீன்

பொறுப்பாளர் : C.கற்பகஜோதி B.A.,

தொடர்புக்கு. **MADURAI SEED YOUTH FEDERATION (MSYF)**
**MADURAI SEED**
**Arjun Shanmuga Illam, 439/1 East Street,**
**Karumbalai, Madurai - 625 020. Ph : 0452 - 2537670, 98948 05446**
**E-mail : maduraiseed1999@gmail.com; Web : madurai-seed.org**